DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 237/2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW-5 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.கோவிந்தசாமி |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 02.06.2026

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ஆர்எஸ் மங்கலம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன் கடந்த 2025 வருடம் எங்கள் காவல் நிலையத்தில் திரு.முகமது சைபுல் கிசாம் என்பவர் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வந்தார். தற்போது அவர் பணிமாறுதல் ஆகி அவசரபணியில் இருப்பதால் அவரால் இன்று நீதிமன்றத்திற்கு ஆஜராக முடியவில்லை. அவரரது கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதாலும் ஆவணங்களின் அடிப்படையிலும் அவருக்கு சார்பாக நான் சாட்சியம்அளிக்கிறேன்.

2.கடந்த 01.07.2025 ம் தேதி காலை 11.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் முகமது சைபுல் கிசாம் நிலைய பொறுப்பில் இருந்தபோது வழக்கின் புகார்தாரரான அல்பெனாசி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலையை குற்றஎண். 208/2025 u/s 78(2), 329(4),296(b),326(f),351(3) BNS யாக வழக்கு பதிவு செய்துள்ளார். முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.

3.பின்னர் வழக்கு கோப்பினை அவரது விசாரணைக்கு எடுத்து கொண்டு அதே நாள் 12.00 மணியளவில் சம்பவயிடம் சென்று சாட்சிகள் சீனிஇப்ராகிம், முகமது யாசுப் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வைமகசர், மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார். பார்வைமகசர் அ.சா.ஆ.3 ஆகவும்., மாதிரிவலைரபடம் அ.சா,ஆ.4 அகவும் குறியிடு செய்யப்படுகிறது. பின்னர் அதே நாள் அதே சாட்சிகள் முன்னிலையில் 13.03 மணியளவில் சம்பவயிடத்திலிருந்து பாதி எறிந்த நிலையில் இருந்த செருப்பு மற்றும் Shoe ஆகியவற்றை அத்தாட்சி தயார்செய்து கைப்பற்றியுள்ளார். **அத்தாட்சி அ.சா.ஆ 5 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

4/பின்னர் வழக்கின் சாட்சிகளான அல்பெசிர், ஹானஹபிசா, அஸ்ரின் ரப்ரா, சர்தார் கான் மற்றும் பார்மைகசர் சாட்சிகளை தனிதனியே விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவுசெய்துள்ளார்.அவர்கள் விசாரணையிலும் சாட்சிகளை விசாரணை செய்ததிலும் குற்றசம்பவம் உண்மையனெ தெரியவந்து வழக்கில் ஈடுபட்ட எதிரியை தேடிவந்த நிலையில் இவ்வழக்கில் சம்மந்தப்பட் எதிரியான முகமது அப்சல் என்பவரை அன்றையதினம் 16.00 மணியளவில் அரசுரணிக்கரை வடக்குபடிக்கரை அருகே வைத்து சாட்சிகள் காவலர்கள் இளங்கோ மற்றும் சந்திரசேகரன் முன்னிலையில் விசாரித்தபோது அவர் தானாக முன்வந்து ஒப்படைத்த குற்ற சம்பவசெயலில் ஈடுப்படட பதிவெண் குறிப்பிடப்படாதா Yamaha R15 இருசக்கர வாகனத்தை அத்தாட்சி தயார்செய்து கைப்பற்றியுள்ளார். இருசக்கரவாகனத்தை **கைப்பற்றியதற்கான அத்தாட்சி அ.சா,ஆ.6 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** பின்னர் எதிரியை கைதுசெய்வதற்கான தக்க காரணம் கூறி அனைத்து சட்டப்படியான நடவடிக்கை மேற்கொண்டு தக்க வழிக்காவல் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார்.

எதிரியிடமிருந்தும் சம்பவயிடத்திலிருந்தும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில ஒப்படைப்புசெய்துள்ளார். பாதி எறிந்த நிலையில் எடுக்கப்பட்ட செருப்பு அ.சா.பொ.1 ஆகவும் பாதி எறிந்தநிலையில் எடுக்கப்பட்ட Shoe அ.சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது,. **இருசக்கரவாகனத்தின் ஒப்படைத்தற்கான படிவம் 91 அ.சா.ஆ.7 ஆகவும், செருப்பு மற்றும் Shoe ஒப்படைத்தற்கான படிவம் 91 அ.சா.ஆ.8 ஆகவும் குறியிடு செய்யப்படுகிறது.** படிவம் 91 ல்கண்ட பதிவெண் குறிப்பிடப்படாதா **yamaha R15 இருசக்கரவாகனத்தின் புகைப்படம் அ.சா.ஆ.,9 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

பின்னர் காவலர்களான சந்திரசேகரன், இளங்கோ அகியோர்களை தனி தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். பின்னர் அவரது விசாரணையை முடித்து கொண்டு எதிரி மீது அதே பிரிவுகளின் கீழ் குற்றஇறுதியறிக்கையை நீதிமனற்த்தில் தாக்கலசெய்துள்ளார்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

1. புகார்தாரர் அளித்த புகாரை சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. வழக்காவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கை சரிவர விசாரணை செய்யாமல் அவசர கதியில் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.